04.08.2017

தி இந்து
தமிழால் இணைவோம்

**கடல் காற்றின் வேகம் குறைந்ததால் தமிழகம் புதுவையில் மழை வாய்ப்பு குறைந்தது**




கடல் காற்றின் வேகம் குறைந்ததால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்துக்கான மழை வாய்ப்பும் குறைந்தது.

வடக்கு ஆந்திர கடலோரம் மற்றும் கன்னியாகுமரி இடையே , உள் தமிழகம் வழியாக நிலவும் காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக , அடுத்து வரும் 3 நாட்களுக்கு தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்யும் என்றும் , ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும் என்றும் சென்னை வானிலை மையம் எச்சரித்திருந்தது. இந்நிலையில் மழை வாய்ப்பு குறைந்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வுமைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:

காற்றழுத்த தாழ்வுநிலை நிலவி வரும் நிலையில் , தமிழகத்துக்கு மழை வந்திருக்க வேண்டும். ஆனால் கடல் காற்றின் வேகம் தற்போது குறைவாக உள்ளதால் , காற்றில் ஈரப்பதம் குறைந்துள்ளது. அதனால் மழை மேகங்கள் உருவாகவில்லை.

இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை வாய்ப்பு குறைந்துள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னையை பொறுத்தவரை , வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் ஒருசில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நேற்று காலை 8.30 மணிக்கு எடுக்கப்பட்ட மழை அளவின்படி , திருபுவனத்தில் 8 செமீ, செய்யாறில் 4 செமீ, சிவகங்கை திருப்பத்தூர் , சென்னையில் தலா 3 செமீ, பரங்கிப்பேட்டை, செய்யூர், உத்திரமேரூர், ராமநாதபுரம், விருத்தாச்சலத்தில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**சிறுதுளி அமைப்பு மூலம் தூர்வாரப்பட்ட குளங்களில் நீர் கொள்ளளவு அதிகரிப்பு**



கோவை சிறுதுளி அமைப்பால் தூர் வாரப்பட்ட உக்குளத்தில் அதிகரித்துள்ள நீர் கொள்ளளவு.

கோவை மாவட்டத்தில் நொய்யல் ஆற்றுப்படுகையில் உள்ள குளங்களில் சிறுதுளி அமைப்பு மூலம் தூர் வாரப்பட்ட நிலையில் , குளங்களின் நீர் கொள்ளளவு திறன் அதிகரித்துள்ளதாக அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததால் , நொய்யல் ஆறும் , அதைச் சார்ந்த குளங்கள் , குட்டைகள் வறண்டு கிடக்கின்றன. இந்த நிலையில் , சுற்றுச்சூழல், நீர்நிலைகள் பாதுகாப்புக்காக சிறுதுளி அமைப்பு சார்பில் , குளம், குட்டைகளைத் தூர் வாருதல் , தடுப்பணை சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கோவை ஆட்சியர் த.ந.ஹரிஹரன் அனுமதியின் பேரில் , நொய்யல் ஆற்றுப் படுகையில் உள்ள குளங்களைச் சீரமைத்து , நீர் மேலாண்மையை வலுப்படுத்தும் பணி நடைபெற்றது. இதன்படி , உக்குளம், புதுக்குளம், கொளரம்பதி, கங்கநாராயணசமுத்திரம், சொட்டையாண்டிக்குட்டை ஆகிய குளங்கள் தூர் வாரப்பட்டன. தூர் வாரும் பணிகள் நிறைவடைந்த நிலையில் , இந்தக் குளங்களின் நீர் கொள்ளளவு அதிகரித்துள்ளது.

இது குறித்து சிறுதுளி அமைப்பு நிர்வாகி வனிதா மோகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: நாட்டில் சுமார் 7.2 லட்சம் ஹெக்டேர் பரப்பில் ஏரிகள் , குளங்கள், குட்டைகள் உள்ளிட்ட நீர்நிலைகள் உள்ளன. மழையின்மை , போதிய பராமரிப்பின்மை உள்ளிட்ட காரணங்களால் , நீர்நிலைகளில் தண்ணீரின் கொள்ளளவு குறைந்து கொண்டே செல்கிறது. எனவே , நீர்மேலாண்மை மூலம் நீர் நிலைகளைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும். கோவையில் உள்ள 5 குளங்களில் தூர் வாரிய பிறகு, அவற்றின் நீர் கொள்ளளவு கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது.இந்தப் பணிகளுக்கு பல்வேறு அமைப்புகள், சங்கங்கள், நிறுவனங்கள் உதவிபுரிந்துள்ளன.

மேலும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அனுமதியுடன் , பேரூர் வட்டத்தில் உள்ள 46 குட்டைகளைத் தூர் வாரி, நீர்வரத்து வாய்க்கால்களைச் சீரமைக்கும் பணி நடக்கிறது.

மாளிகைக்குட்டை, நாதேகவுண்டன்புதூர் குட்டை , வடிவேலாம்பாளையம் குட்டை , சென்னனூர் குட்டை , ஆட்டுக்காரன் கோயில் குட்டை , ஓடைக்கரை குட்டை , சாவடிக்குடை, செலம்பனூர் குட்டை , குழந்தை கவுண்டன்குட்டை , குமரன் குட்டை ஆகியவை தூர் வாரப்பட்டுள்ளன.

மழைக் காலத்தில் தண்ணீரைச் சேமிக்கும் வகையில் , மாதம்பட்டி ஊராட்சியில் கரடிமடை அருகேயுள்ள சிற்றோடையில் 7 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. முண்டந்துறை தடுப்பணையில் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவைக் கட்டுப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு நீர்நிலைகள் பாதுகாப்பு , நீர்மேலாண்மைப் பணிகள் மூலம் நிலத்தடி நீர்மட்டமும் உயரும்.

கடந்த 2016-ம் ஆண்டில் முண்டந்துறை தடுப்பணையில் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவுகளை கட்டுப்படுத்த, தடுப்பணையின் உட்பகுதியில் மெல்லிய கான்கிரீட் சுவரை உருவாக்கி நீர்க்கசிவை கட்டுப்படுத்தி , தடுப்பணையில் உள்ள வண்டல் மண்ணை ஓரளவுக்குத் தூர் வாரி , செப்பனிடும் பணி மேற்கொள்ளப்பட்டது. எனினும் , தென்மேற்குப் பருவமழை தொடங்கியதால் இந்தப் பணியை முடிக்க முடியவில்லை. இதனால் தடுப்பணையில் கசிவுநீர் வெளியேறுவது தொடர்ந்தது. எனவே , நடப்பாண்டில் நீர்க்கசிவுக் கட்டுப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும் என்றார்.